OS. 39/2014

நாள். 19.09.2022.

வா.சா. 1 – வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் ஆதியில் முத்து ஐயங்காருக்கு பாத்தியப்பட்டிருந்தது. முத்து ஐயங்கார் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. முத்து ஐயங்கார் இறந்த பிறகு அவரது வாரிசு அடிப்படையில் முத்து ஐயங்கார் மகள் குப்பம்மாள் அனுபவித்து வந்தார். குப்பம்மாள் அச்சொத்தை காளியப்பபிள்ளைக்கு ஒத்திக்கு வைத்தார். காளியப்ப பிள்ளை அச்சொத்தை வேலுபண்டிதர் என்பவருக்கு ஒத்தியை மாற்றி வைத்தார். குப்பமாளுக்கு வாரிசுகள் ஏதும் இல்லாமல் இறந்துவிட்டார். முத்து ஐயங்காரின் சகோதரி சுந்தரவள்ளி அம்மாள் தான் வாரிசாக இருந்தார். சுந்தர வள்ளி அம்மாள் நான் தான் ஒரே வாரிசு என்று சொல்லி வேலு பண்டிதரிடம் சொத்தை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார். வேலு பண்டிதருக்கு வசதி இல்லாத காரணத்தால் அவர் அடையாளம் காட்டிய முத்துவெயிலுசேர்வை என்பவருக்கு சுந்தரவள்ளி அம்மாளே கிரயம் கொடுக்க சொன்னதின் அடிப்படையில் முத்துவெயிலு சேர்வை 1944ல் சுந்தர வள்ளி அம்மாளிடமிருந்து ஒத்தியை அதில் கட்டுப்படுத்தி ஒத்திமீட்பு கிரயமாக எழுதி வாங்கினார். அந்த ஒத்தியை முத்து வெயிலு சேர்வை திருப்பவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த ஒத்தியை வேலு பண்டிதர் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வேலு பண்டிதர் இறந்துவிட்டார். முத்து வெயிலு சேர்வையும் 1960ல் உயில் எழுதி வைத்துவிட்டு 1966ல் இறந்துவிட்டார். முத்து வெயிலு சேர்வை உயில் எழுதிவைக்கும் போது ஒத்திவை மீட்காமல் தான் உயில் எழுதி வைத்தார். முத்து வெயிலு சேர்வை அந்த உயிலை வாதிகளாகிய எங்கள் 3 பேருக்கும் எழுதிவைத்தார். முத்து வெயிலு சேர்வையின் அண்ணன் பெருமாள் சேர்வையின் மகன் வயிற்றுப்பிள்ளை தான் என் அம்மா வெயிலம்மாள் ஆவார். 1960ல் எழுதிவைக்கப்பட்ட உயில் பத்திரத்தின் அசல் ஆவணம் முத்து ராமு சேர்வையிடம் தான் இருந்தது. முத்து ராமு சேர்வை என்பவர் என் அம்மாவின் தந்தை ஆவார். முத்து வெயிலு சேர்வை எங்களுடன் சேர்த்து 11 பேர்களுக்கும் தனித்தனி

சொத்துக்களை எழுதிக்கொடுத்துள்ளார். முத்து வெயிலு சேர்வை எழுதிக்கொடுத்த உயில் பத்திரத்தில் பட்டா எண், பைமாஸ் நம்பர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விவரமும் உயில் பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1960 வருடத்திய உயில் பத்திரத்தின் அடிப்படையில் தாவா வழக்கை தவிர வேறு எந்த வழக்கையும் நான் இதுவரை தாக்கல் செய்யவில்லை. இது தான் முதல் வழக்காகும். 1960 உயில் உண்மையான உயில் பத்திரம் அல்ல என்றும் அதனால் தான் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. முத்து வெயிலு சேர்வை 1966ல் இறந்தார். அவர் இறக்கும் போது எனக்கு 18 வயது இருக்கும். தற்போது எனக்கு 75 வயது ஆகிறது. முத்து வெயிலு சேர்வை உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு 17, 18 வயதில் தெரியவந்தது. அவ்வாறு தெரியவந்த பிறகு என் அம்மாவோ, அப்பாவோ என் மகனுடைய உயில் சொத்து என்று ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் உயில் சொத்து முத்து ராமுவின் பராமரிப்பில் தான் இருந்தது என்பதால் எங்களையும் முத்து ராமு தான் பராமரித்து வந்ததால் உயிலைப்பற்றி எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்து வந்தோம். முத்து ராமு சேர்வை தான் வாரிசு என்று சொல்லி வேலு பண்டிதர், அவருடைய மகன் ரங்கசாமி மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஒத்தியை மீட்க வழக்கு போட்டு ஒத்தியை மீட்டார். அதில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டதால் மேல்முறையீடு AS.NO.134/1973 என்ற வழக்கை ரங்கசாமி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த நடவடிக்கை முழுவதும் வேலு பண்டிதரின் மகன் ரங்கசாமிக்கும் முத்து ராமுக்கும் இடையே நடைபெற்றது என்றால் சரிதான். என் அம்மா தான் பணம் கொடுத்து ஒத்தியை திருப்பினார். அதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. முத்து ராமு அச்சொத்தானது தனக்கு சாதகமாகிவிட்டது என்று சொல்லி வெள்ளைச்சாமிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. வெள்ளைச்சாமி பெயரில் மோசடியான ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்று சொல்லி முத்து ராமு வெள்ளைச்சாமி சேர்வை மீது பரமக்குடி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் OS.NO.176/1978 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கு முத்து ராமு சேர்வைக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பை எதிர்த்து வெள்ளைச்சாமி சேர்வை இராமநாதபுரம் சார்பு நீதிமன்றம் (இருப்பு) மதுரையில் AS.NO.133/1981 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் அதனை எதிர்த்து

வெள்ளைச்சாமி சேர்வை முத்து ராமுக்கு எதிராக 2ம் மேல் முறையீடு AS.NO.1599/1982 என்று தாக்கல் செய்துள்ளதில் வெள்ளைச்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரயம் சரியானது என்று வெள்ளைச்சாமிக்கு சாதகமாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 2ம் மேல்முறையீட்டில் வெள்ளைச்சாமி சேர்வை வெற்றி பெற்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் தெரியும் என்றும் அந்த விவரத்தை இந்த வழக்கில் சொல்லாமல் மறைத்து ஸ்டேட்டஸ்கோ உத்தரவு பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)